# பதிற்றுப்பத்து காட்டும் இனக்குழு பண்பாடும் தொழில் கருவிகளும்

*இரா. கெஜலட்சுமி*
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783693

***ஆய்வுச் சுருக்கம்***

*பழம்பெறும் தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பொழுது அரசர்களின் வரலாற்றை மட்டும் எழுதினால் அவை முழுமையான தமிழர் வரலாறாகாது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் இனக்குழு சார்ந்த பண்பாட்டுப் பரிமணங்களையும் இணைத்தால்தான் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் விரிவானதாகவும் பழம்பெரும் பண்பாடாகவும் அமையும். அவ்வகையில் இனக்குழுப் பண்பாடு பதிற்றுப்பத்தில் எவ்வகையில் பதிவாகியுள்ளது என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *வரலாறும் பண்பாடும் – இனக்குழு சொல் விளக்கம் – இனக்குழு – விளக்கம் – இனக்குழுப் பண்பாட்டு வாழ்க்கை – தொல்புழங்கு பொருள் பண்பாடு – தொழில் கருவிகள் – வேட்டைத்தொழில் கருவிகள் – உழவுத் தொழில் கருவிகள்.*

## முன்னுரை

*சங்ககாலப் புலவர்கள் பாடிய பாடல்களில் பல்வேறு பண்பாட்டுச் சூழல்கள் பதிவாகியுள்ளன. இன்றைய காலகட்டத்தில் உலக வரலாறுகள் அனைத்தும் அரசர்களைச் சார்ந்த வரலாறுகளாகவே காணப்படுகின்றன. அவை அரசர்களின் புகழ்பாடும் சுயசரிதைகளே ஆகும். அவற்றில் இனக்குழுக்கள் சார்ந்த சமுதாயப் பண்பாட்டு வரலாற்றை காண முடியாது. இவ்வாறு எல்லாமே அரசகுலத்தின் வரலாறாகவே காணப்படுகின்றன. ஏனெனில் அவ்வரசன் சார்ந்த பண்பாட்டு மரபுகள் மட்டுமே இடம்பெறுகின்றன. மக்களின் சமூகம் சார்ந்த பண்பாடு மறைக்கப்பட்டுள்ளது என்பர். அவ்வகையில் பதிற்றுப்பத்தில் காணலாகும் இனக்குழு பண்பாட்டை ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.*

## வரலாறும் பண்பாடும்

*வரலாறு அரசர்களின் வரலாற்றை மட்டும் கூறுவதால் அவை முழுமை பெறுகின்றன, மக்களின் சமூகம் சார்ந்த பண்பாடு மறைக்கப்பட்டுள்ளது. வரலாறு அரசர்களின் வரலாற்றை மட்டும் கூறுவதால் அவை முழுமை பெறாது. அக்காலச் சமூகத்தின் வரலாற்றை எந்த ஒரு வரலாறு கூறுகிறதோ அல்லது விளக்குகிறதோ அப்போழுதுதாள் முழுமை பெறும் என்ற புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான இரான்ஜித்கோ கருத்துக் குறிப்பிடத்தகுந்தது ஆகும்.*

*பண்பாடு என்னும் கட்டமைப்பைச் சுற்றி தான் வரலாறு உருவாக்கப்பட வேண்டும். பண்பாடு தோன்றவில்லையெனில் வரலாறு வெறும் நிகழ்வாகவே காணப்படும். பண்பாடு என்னும் சொல்லுக்கு இணையாக கலாச்சாரம், நாகரிகம் போன்ற சொற்களும் தமிழ் உலகில் புழங்கப்படுகிறது. ஆயினும் பண்பாடு அனைத்து உயிரி சார்ந்த பண்பு நிலையோடு பொருள் கொள்ளப்படுகிறது. நாகரிகம் என்பது மனித குலத்தில் நகர கட்டமைப்பு தோற்றம் பெற்ற சூழலோடு பொருள் கொள்ளப்படுகிறது. இதன் அடிநிலை என்பது செயலாக்கம் சார்ந்த வளர்ச்சி என்ற பொருண்மைக்குள் இருப்பதை உணரலாம். மலையாளத்தில் பண்பாடு என்ற சொல்லுக்கு இணையாக “சம்ஸ்காரம்” என்ற*

*சொல் பயன்படுத்தப்படுகிறது. சமஸ்கிருதத்திலும் இச்சொல்லாடலே கையாளப்படுகிறது.*

*பண்பாடு என்பதற்கு க.ப. அறவாணன் தலைமுறையினரிடம் அலைமுறை இருந்து அடுத்த தலைமுறையாக ஒரு தலை முறையினருக்கு மரபு வழியே இடம் பெயரும் நடந்ததைக் கோட்பாடே பண்பாடு"[1] என்கிறார். மேலும், "பண்பாடு என்பது இனவழிச் சமூகத்தின் போக்கைத் தாங்கி நிற்கிறது"[2] என்றும் விளக்கம். கொடுக்கிறார்.*

*"தமிழ் மொழிதான் தமிழினத்தின் அடையாளம், அதன் பண்பாடு என்பது கூட அதன் மொழிதான்[3] என்று க. பஞ்சாங்கம் மொழியைப் பண்பாடு என்கிறார்.*

*"வரலாறு மக்கள் சமுதாயத்தைப் பற்றிய முழுமையான செய்தித் தொகுப்பாதல் வேண்டும். இவ்வாறு அரசவைச் செய்திகளைப் பற்றி மட்டும் கூறாமல், பொது மக்களின் வாழ்க்கைச் செய்திகளையும் எடுத்துக் கூறுவது அச்சமுதாயத்தின் பண்பாட்டு வரலாறு எனப்படும்"[4] என்கிறார் ந. சுப்ரமண்யன்.*

*"வாழ்வில் பலபல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும்[5] என்கிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.*

*"சமூகக் குழுக்கள். இனங்கள், நாடுகள் என்ற நிலையில் காணப்படும் பல்வேறுபட்ட உறவுகள், கலை அழகியல் வெளிப்பாடுகள். சடங்குகள், வழிபாடுகள் என்று இவற்றைக் குறிப்பது பண்பாடு"[6] என்கிறார் தி.சு நடராசன்.*

*பக்தவத்சல பாரதி பண்பாட்டை இரண்டாகப் பிரிக்கிறார். அதாவது பொருள்சார் பண்பாடு, பொருள்சாரப் பண்பாடு என்பதாகும். மக்கள் அவர்களின் நேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாடாகவும், இலக்கியம், வழிபாடு. இது போன்ற பிறவற்றையும் பொருள்சாரா பண்பாடாகவும் கருதுகிறார்.[7] "பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினர் என்ற நிலையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் முதலியன பற்றி பெற்ற ஒருவித வாழ்க்கை முறையாகும்"[8] எனக் கூறுகிறது.*

*ஆகவே, பண்பாட்டில் வாழ்க்கை கட்டமைப்பு. பின்பற்றபடும் மரபார்ந்த செயல் நிலை, நகர நாகரிக உருவாக்கம், அது சார்ந்த இயக்கநிலை, புழங்குவெளி சார்ந்த பொருள்கள். அரசியல் சார்ந்த செயல்பாடு, மொழியின் பன்முக கட்டமைப்பு இவை அனைத்தும் பண்பாடு என்ற வளையத்திற்குள் அடங்கும். எனவே, மனித சமூகத்தின் அனைத்து இயங்குநிலையையும் பண்பாடு என்றே கருத வேண்டும். வரலாற்றோடு பண்பாடும் பண்பாடோடு வரலாறும் கலந்துள்ளது.*

**இனக்குழு சொல் விளக்கம்**

*இனக்குழு என்பதினை ஆங்கிலத்தில்* "Ethnic" *என்று குறிப்பிடுவர். தமிழில் இனக்குழு, குலங்கள், குடிகள், குழுக்கள், பழங்குடிகள், தொல்குடிகள், ஆதிகுடிகள் எனப் பல்வேறு சொற்கள் கையாளப்படுகின்றன. "க. இரத்னம் குலங்கள், குடிகள் என்றும் மார்க்சியவாதிகள் "இனக்குழு" எனவும், மானிடவியலாளர்கள் "பழங்குடி" எனவும், இன்னும் சிலர் வேறு வகையிலும் கூறுகின்றனர்[9] என பக்தவச்சல பாரதி குறிப்பிடுகிறார்.*

*சமூகவியலாளர்கள்* "Racial Group" *என்றும், மானிடவியலாளர்கள்* "Ethnic Group" *என்றும், வரலாற்றாளர்கள்* "Tribe" *என்றும் கூறுகின்றனர். மண்ணியல் துறையாலர்கள் மக்கள் இனப்பிரிவு[10] எனவும் கட்டுவதாகத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் சீராய்வு செய்து வெளியிட்டுள்ள கலைச்சொல் பேரகராதி குறிப்பிடுகின்றது.*

*தமிழில் பல்வேறு சொற்கள் கையாளப்பட்டாலும் இச்சொற்களுக்கு இடையில் சிறுசிறு வேறுபாடுகள் இருக்கின்றன. அனைத்துச் சொற்களும் நாம் கருதும் அல்லது மையமிடும் பொருளைச் சுட்டுவது கிடையாது. ஒரு சமுதாயத்தில் நாகரிகம் அடைந்த இளமும், நாகரிகம் அடையாத இனமும் சேர்ந்தே வாழ்வர். இவற்றை அடிப்படையாகக்*

*கொண்டு இச்சொற்களைக் கையாளுதல் அவசியமானது ஆகும்.*

*பழங்குடி, தொல்குடி. ஆதிவாசிகள் போன்ற சொற்கள் எல்லாம் நாகரிகம் அடையாத பழமையான பண்பாட்டுடன். ஒரு இனத்தின் தொடக்க கால நிகழ்வுகளை இன்றும் சுமந்து கொண்டிருக்கும் மக்களைக் குறிக்கும். நலங்கள், குடிகள் என்பவை நாகரிகம் அடைந்த, அடைந்து கொண்டிருக்கின்ற மற்றும் அடையாத மக்களின் ஒரு பிரிவினரை மட்டும் குறிக்கும். இவை இரண்டிற்கும் ஒரு சிறு ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பதை உணரலாம்.*

*மேலும், இனக்குழு என்பது பண்பட்ட, பண்படாத சமூகங்களைக் குறிக்கும் பொதுப் பெயராக அமைவதைக் காணலாம். அந்தந்த இனக்குழு தான் வாழும் சூழல் சார்ந்த பண்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்.*

*ஆயினும் இச்சொற்கள் அனைத்தும் இனக்குழு என்ற ஒற்றைப் பொருண்மைக்குள் அடங்குவதையும் காணலாம்.*

**இனக்குழு - விளக்கம்**

*"வம்சம், இரத்த உறவு, பரம்பரை என்ற மூன்று அடிப்படையில் இணைந்திருக்கும் மக்கள் கூட்டத்தை இனம் என்று குறிப்பிடலாம்"[11] என்கிறார் க. ப. அறவாணன்.*

*செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி இனம் என்பதற்குத் "துணையாகச் சேரும் கூட்டம், வகுப்பு, குலம், சுற்றம்"[12] எனக் கூறுகிறது.*

*"ஒவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு சாதிக் குழுவும் வட்டார இனமென்றே கூற வேண்டும் [13] என்கிறது வாழ்வியல் களஞ்சியம்.*

*மேற்கண்ட இவ்வரையறைகளின் அடிப்படைகளில், ஓர் இனம் சார்ந்த பல உயிரிகள் ஒன்றாக அல்லது கூட்டாக இணைந்து செயல்படும் முறைக்கு இனக்குழு முறை எனலாம்.*

*பதிற்றுப்பத்தில் "இனம்" என்ற சொல் ஐந்து இடங்களில் கையாளப்பட்டுள்ளது. அச்சொல் மக்களைக் குறிக்கவும், மாக்கள் கூட்டத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "இனம் தோடு அகல" (பதி:19:16), "தோடு கொள் இளநிரை (பதி: 12:6), "யானை இளம் பரந்த புலம்" (பதி: 25: 3), "துவ்வா நறவின் சாய் இனத்தானே" (பதி: 60: 12), பல்களிற்று இனநிரை (பதி: 67: 7) என்று பதிற்றுப்பத்தில் மக்கள் மற்றும் விலங்கு முதலிய தொகுதிகளைச் சுட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இச்சொல் மக்கள் மற்றும் விலங்குகள் முதலிய உயிரிகள் தொகுப்பாக வாழ்வதைக் குறிக்கும். எனவே, இங்கு இனக்குழு என்பது ஒன்றாகச் சேரும் கூட்டம் என்ற பொருண்மையிலேயே கொள்ளப்படுகிறது.*

*இவ்வகையில் மனிதன் தனியாக செயல்பட்டு காலப்போக்கில் தனிநிலை என்பது தனது தேவையை நிறைவேற்ற முடியாத சூழலில் இனக்குழுவாக ஒன்றிணைந்தான். காலப்போக்கில் அதன் தொடர்ச்சியாகப் பலமாற்றங்களுக்கு மனித இனம் குழுவாக வாழ ஒன்றிணைந்ததற்கு இரண்டு தேவைகள் அடிப்படையாக அமைந்தன எனலாம்.*

*1. உயிரியல் தேவை*
*2. உடலியல் தேவை*

*இவ்விரண்டு தேவைக்காக இணைந்த மனித சமூகம் வேட்டைச் சமூகமாக, நாடோடிச் சமூகமாக. வேளாண் சமூகமாகப் பல பண்பாட்டு நிலையில் பரிணமித்ததைச் செல்விலக்கியங்கள் போன்ற பழம்பெரும் இலக்கிய, இலக்கணங்கள் பதிவு செய்துள்ளன. தமிழ்ச் சமூகத்தின் இப்பண்பாட்டுப் பரிணாமத்தைத் தான் தொல்காப்பியம் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு.*

***"மாயோன் மேய காடுரை யுலகமுஞ்***
***சேயோன் மேய மைவரை யுலகமும்***
***வேந்தன் மேய தீம்புன் நூலகமும்***
***வருணன் மேய பெருமண ஓலகமும்***
***முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்***
***சொல்வில முறையாற் சொல்லவும் படுமே"***

***(தொல் பொருள்: 951)***

*என விளக்கியுள்ளது. இதை உயிரியல் பரிணாமக் கோட்பாட்டோடு ஒப்பிட்டு நோக்கலாம். தமிழ்ச் சமூகம் வேட்டை,*

நாடோடி, வேளாண் வணிகச் சமூகங்களாகப் பரிணாமம் அடைந்ததைக் தொல்காப்பியரின் சூத்திரங்கள் வழியாகத் தெளியலாம். இந்த அடிப்படைகள் நிலங்களைச் சார்ந்து அமைந்ததைத் தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது. மலை, காடு, கழனி, கடல் போன்ற நிலவியல் கூறுகளைக் கொண்டது தமிழ் கூறும் நல்லுலகு ஆகும். இந்த நிலவியல் கூறுகளே தமிழ் மக்கள் பல்வேறு கால நிலைகளில் குழுக்களாக வாழத் தொடங்குவதற்குக் காரணமாக இருந்துள்ளது. இவ்வகையில் தமிழ் இனக்குழுக்கள் பண்பாட்டுச் செயலாக்கும் பெற்றதைச் சங்க கால இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

**இனக்குழுப் பண்பாட்டு வாழ்க்கை**

பதிற்றுப்பத்து காலகட்டம் என்பது நிலவுடைமை அரசுருவாக்கம் தோற்றம் பெற்றுக்கொண்டிருந்த காலம் எனலாம், இனக்குழுவாக ஒருங்கிணைந்து வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் சமுதாயத்திடம் நிலங்களைத் தங்களின் தேவைக்காகக் கட்டுப்படுத்த பிற குழுக்கள் நினைத்து, அதனை தன்வசப்படுத்திக் கொள்ள முற்பட்டது. இந்தப் பண்பாட்டுச் சூழலைத்தான் பதிற்றுப்பத்து எடுத்தியம்புகிறது. பல்வேறு இனக்குழுக்களை வென்று சேர மன்னர்கள் தங்களின் நிலவுடைமையைப் பெருக்கிக் கொண்டதைப் பல இடங்களில் பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ளது.

பதிற்றுப்பத்தில் வேட்டுவர், அண்டர், பூமியர், கோவலர், கொங்கர், பாணர், அகவலன், பொருநர், கண்ணுனர், இயவர், கோடியர், வயிரியர், புலவர், மள்ளர், பாசவர், சேரர் போன்ற இனக்குழுக்கள் செயல்பட்ட பதிவு கிடைக்கிறது. இவர்களின் வாழ்க்கைப் பண்பாடு என்பது சூழ்நிலையை மையமாகக் கொண்டதாகும். மக்களின் அன்றாட செயல்பாடு என்பது பண்பாட்டின் உந்துதல் எனலாம். பண்பாட்டின் செயல் நிலையில் தான் இவர்களின் வாழ்க்கைக் கட்டமைப்பு அமைந்திருந்தது.

இக்குழுக்களின் அசைவியக்கம். சார்ந்த இயக்கமுறையை பண்பாட்டோடு இனம் காண வேண்டும். இதனை வளர்ச்சி படி நிலையின் அடித்தளத்தில் அடையாளப்படுத்தினால் இக்குழுக்களின் பண்பாட்டு இயங்கு வெளியை மீட்டெடுக்க இயலும். வளர்ச்சி படிநிலை என்பது வாழும் சூழலுக்கு ஏற்ப அன்றாட செயல்திட்டங்களை வகுத்துக் கொண்ட பாங்கு எனலாம். பழமையான வாழ்க்கைப் பண்பாட்டில் இருந்து புதிய பண்பாடு தோற்றம் பெற வேண்டும். அப்பொழுதுநாள் வளர்ச்சி அமையும். இதில் பழமை தொன்ம நிலையாகவும் புதுமை ஆக்க நிலையாகவும் அடையாளப் படுத்திக்கொள்ளும்.

பக்தவச்சல பாரதி அலைகுடி நிலைகுடி அசைவியக்கம், திணை - குடி சார்ந்த அசை வியக்கம், திணைமரபு பொது மரபு சார்ந்த அரைவியக்கம்'[14] எனச் சங்ககால பாணர் குடியைத் திணைசார்ந்து கட்டமைப்பதைக் காணமுடிகிறது. இவர் அலைகுடி - நிலைகுடி என்ற கட்டமைப்பை பாணர் சமூகம் சார்ந்து உருவாக்கியுள்ளார். இச்சொல்லாடலும் திணைசார்ந்தே பயன்படுத்தியுள்ளார்.

குழுக்களின் வளர்ச்சி நிலையின் அடிப்படைக்கு இச்சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிப் படிநிலையின் அடிப்படையில் பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ள இனக்குழுச் சமூகத்தை இரண்டு நிலைகளில் வகைப்படுத்தப்படுகிறது.

1. அலைகுடி
2. நிலைகுடி

இந்த இரண்டு பண்பாட்டு நிலைகளை மையமாகக் கொண்டே பல்வேறு இனக்குழுக்கள் செயல்பட்டுள்ளன. இவை நாகரிகத்தின் தொடக்க நிலைகளை உணர்த்தும் பண்பாட்டின் படிநிலைகளை எடுத்துக்காட்டும் விதமாக அமையும். இவ்விரண்டு நிலைக்கும் ஒரு வலுவான பண்பாட்டு அடித்தளம் அமைந்தது எனலாம்.

**தொல்புழங்கு பொருள் பண்பாடு**

*மனித இனம் நாடோடியாக வாழ்ந்த பொழுதே ஆயுதங்களைச் செயலாக்கம் செய்துள்ளனர். தனிநிலை நாடோடி பண்பாட்டில் சிறிய விலங்குகளை வேட்டையாடவும், கிழங்கு, பழம் சார்ந்த உணவினைச் சேகரிக்கவும் ஆயுதங்கள் தேவைப்பட்டன. அன்றையச் சூழலில் ஆயுதம் என்பது சிறிய தடியே ஆகும். இத்தடியைப் பயன்படுத்தி தன் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலையாகும். இத்தடியைப் பல்வேறு நிலையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற சிந்தனையே மனிதப் பண்பாட்டின் முக்கிய காலகட்டமாகும். தமிழகக் கிராமங்களில் சிறிய தடியினைப் பயன்படுத்தி வேட்டையாடவும், கிழங்கு தோண்டவும் செய்கின்ற இன்றைய பண்பாட்டு பழக்கம் என்பது தொடக்ககால மனித சமூகத்தின் பண்பாட்டு எச்சமாகும்.*

*தனக்குக் கிடைக்கும் பொருளைப் பயன்படுத்தி தன்தேவையை நிறைவேற்றிக் கொள்கின்ற பண்பாட்டுச் சூழலாகும். இதனைத் தன் புழங்குவெளி சார்ந்த பயன்பாடாக மனித சமூகம் ஊடாட்டம் செய்துள்ளது. பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு வகையான புழங்கு பொருள் பண்பாடு பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இப்புழங்கு பொருள் பண்பாடு, தொல்லியல் ஆய்வில் காலகட்டங்களைக் கணிக்கத் துணைசெய்கின்றன. இதன்மூலம் அக்கால மக்களின் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டு ஊடாட்டங்களை மீட்டுருவாக்கம் செய்ய இயலும். அவ்வகையில் பதிற்றுப்பத்து பல்வேறு புழங்கு பொருள் பண்பாட்டைத் தனக்குள் கொண்டுள்ளது.*

1. *தொழில் கருவிகள்*
2. *இசைக்கருவிகள்*
3. *இல்லப் புலங்கு கருவிகள்*
4. *அணிகலன்கள்*

*என்ற வகைக்குள் பதிற்றுப்பத்து சமூகம் பயன்படுத்திய புழங்கு பொருள் பண்பாட்டை அடக்கமுடியும். இவை முழுவதும் தனி மனித வாழ்வியல் சார்ந்த அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இப்பொருள்கள் முழுவதும் ஒரே காலகட்டத்தில் தோன்றியவை அல்ல, பல்வேறு காலகட்டத்தில் ஒவ்வொரு தேவையின் விளைவால் தோன்றிய பண்பாடு எனலாம். இவற்றை உருவாக்க வேண்டிய கட்டாயத் தேவைக்குள் அக்கால மனித சமூகம் இருந்துள்ளது என்பது இதன் உள்ளார்த்தக் கருத்தாக்கமாகும். சில பொருள் மனித சமூகப் பண்பாட்டின் அடிப்படையாகவும் சில பொருள் ஆடம்பரமாகவும் இருந்திருப்பதைக் காணமுடிகிறது. இப்பொருள் சார்ந்த உருவாக்கப் படிநிலைகளைத் தமிழ்ச் சமூகம் கடக்க, பல போராட்டங்களை நடத்தியுள்ளதை ஆராய்ந்து அறிய முடிகிறது, வாழ்வியல் சார்ந்த தேவைக்கு உருவாக்கப்பட்ட பொருள்கள் பண்பாட்டு அடையாளச் சின்னங்களாக மாறியுள்ளதை உணர்ந்து கொள்ளலாம். தேவைகள் கூடும் பொழுது மனிதர்கள் சிந்தனையின் விளைவால் புதிய உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.*

**தொழில் கருவிகள்**

*மனித சமூகத்தின் மிகவும் பழைமையான கருவி என்று கூறினால் அது தொழில் சார்ந்த கருவியே எனலாம். இத்தொழிலின் அடிப்படை என்பது உணவுத் தேவையின் கூறுகளைக் கொண்டதாக இருந்துள்ளது. உணவுப் பற்றாக்குறை தோன்றும் பொழுது மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழல் உருவாயிற்று எனலாம். இச்குழல் வேட்டையாடவும், பயிர்த்தொழில் செய்யவும் தூண்டியது" எனக் கருதலாம். இந்நிலையில் தொடக்கத்தில் தளக்கு கிடைத்த பொருள்களைக் கொண்டு தன் தேவைகளை நிறைவு செய்திருக்கலாம். பிறகு தான் தேவைக்கேற்ற கருவிகளை உருவாக்கி இருக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கிய தொழிற்கருவிகளை மூன்று பண்பாட்டு நிலையில் வகைப்படுத்தலாம்.*

1. *வேட்டைத்தொழில் கருவிகள்*
2. *உழவுத்தொழில் கருவிகள்*
3. *போர்த்தொழில் கருவிகள்*

### வேட்டைத்தொழில் கருவிகள்

மனிதனின் தொடக்ககால வாழ்வு வேட்டையைச் சார்ந்த வலைசை போதல் வாழ்வாக அமைந்திருந்தது எனலாம். அப்பொழுது தன் உணவிற்காக வேட்டையாடியிருக்க வேண்டும். வேட்டையில் தன் எதிராளியான விலங்கை அவள் வென்றாக வேண்டிய சூழல் நிலவியுள்ளது. இல்லையெனில் பெரிய விலங்கு சில நேரங்களில் மனிதனை வேட்டையாடிவிடும். இச்சூழலில், மனிதன் முதலில் தன்னையே ஆயுதமாகப் பயன்படுத்தினான். பிறகு கொடிய விலங்குகளை வேட்டையாட முற்பட்ட பொழுது தன் உடல் வலிமை மட்டும் போதாதாகிய குழலில் தளக்குக் கிடைத்த ஆயுதத்தைக் கொண்டு போராடினான் எனக் கருதலாம். இது அவனுக்கு வெற்றியைத் தேடிதந்தது. இந்நிலையில் இருந்து கருவியினை உபயோகித்தான். இதனை பதிற்றுபத்திலும் காணலாம்.

**தேம்பாய் கடாத்தொடு காழ்கை நீவி**

(பதி 53.17)

என்பதில் யாணைக்கு மதம் பிடிக்கும் பொழுது காழ் என்ற குத்துக்கோலைக் கொண்டு அடக்குவர் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் குத்துக்கோல் என்பது பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு மதம் பிடித்த யானையை அடக்கும் அளவிற்கு அக்கோல் பலம் கொண்டு இருந்திருக்கிறது. கோல் என்பதை சாதாரணத் தடியாகக் கருத இயலாது. இதில் பல்வேறுபட்ட வரலாற்று படிநிலைகள் பொதிந்திருப்பதை ஆராய்ந்து நோக்க வேண்டும்.

போருக்காகப் பயன்படுத்தப்படும் யானைக்கு மதம் பிடித்தால் அதனை எவ்வாறு அடக்க வேண்டும் என்ற நுண்ணிய முறையை அச்சமூகம் அறிந்து வைத்திருந்தது மேலான அறிவாகும். இக்கோல் மனித வாழ்வின் தொடக்ககால வேட்டையில் பயன்படுத்தப்பட்டது என்றே கருத வேண்டும். தொடக்கத்தில் தனிநிலைப் போராட்டத்தில் இது போன்ற தடிகளே சிறந்த ஆயுதமாகப் பயன் படுத்தப் பட்டிருக்க வேண்டும். உலோகப் பயன்பாடு அறியாத நிலையில் மனித சமூகம் கற்களையும்? தடிகளையுமே தன் பாதுகாப்புக்கும், தன் உணவுத் தேவைக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தியது எனத் தொல்லியல் ஆய்வாளர்களும் கருதுகின்றனர். இந்தத் தடி பயன்பாடே நாளடைவில் பல்வேறு நிலையில் பயன்படுத்த மனித சமூகம் கற்றுக் கொண்டுள்ளது எனலாம். யாவையினை வேட்டையாடிய பதிவுப் பதிற்றுப்பத்தில் காணப்படுவதை நோக்க வேண்டும்.

**மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு”**

(பதி: 30: 1)

இதில் காட்டிலுள்ள வலிமையுள்ள யானையினது வெள்ளிய கொம்பினை எடுத்து வேட்டுவர் செல்வர் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் யானையின் தந்தத்தை வேட்டையாடியே எடுக்க முடியும் என்பதை நோக்க வேண்டும். “காழ்” என்ற குத்துக்கோலைக் கொண்டு யானையை அடக்குவது போலவே இக்கருவியைக் கொண்டு வேட்டையாடியிருப்பர் என்ற கருத்தாக்கத்தையும் பெற முடியும் மேலும்,

**கந்துகோ ளியாது காழ்பல முருக்கி**

(பதி:77-8)

என்பதில் சேரனின் யானைப்படை குத்துக் கோலையும் முருக்கி அடித்து செல்லும் ஆற்றலுடையது எனக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, குத்துக்கோல் யானையினை அடக்கப் பயன்படுத்தப்பட்ட கருவி என்பதை உணரலாம். யாளை போன்ற வலிமையான விலங்குகளை அடக்க இது போன்ற கருவி பயன்பாட்டில் இருந்திருப்பதை பழைமையின் எச்சமாக நோக்க வேண்டும். இந்தக் கோல் பயன்பாடு என்பது பழங்காலத்தில் பெண் சமூகம் வேளாண்மையில் கிழங்குகளைத் தோண்ட பயன்படுத்தப்பட்ட கருவிகளாகத் தொல்லியல் ஆய்வாளர்களும் கருதுகின்றனர். இக்கருவி பின்னர் வேட்டையாடவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தாக்கம்

மேற்கண்ட தரவுகள் அடிப்படையில் நிரூபனமாகிறது. இவ்வேட்டைக் கருவியின் அடுத்த நிலையில் பாணர் கையில் கோலாகச் செயல்பட்டுள்ளது என்பதை பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ளது.

**கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்**
**அகவலன் பெறுக''**

(பதி: 43 27-25)

என நுண்கோலைக் கையில் வைத்துக் கொண்டு போர்க்களத்தை வாழ்த்திப்பாடும் அகவலன் பரிசில் பெறுக எனப் புலவர் வாழ்த்துகிறார். இங்கு அகவலன் நுண் கோலைக் கொண்டு எதற்கு வாழ்த்த வேண்டும். வெறுமனே பாடி வாழ்த்தினால் போதுமானது அல்லவா. ஆனால், வேட்டைச் சமூக மரபில் இருந்து வந்த பண்பாட்டுப் பழக்கத்தை வேறு சமூகமாகப் பரிணமித்தச் சூழலிலும் விடமுடியாத மரபு கட்டமைப்பைச் சிந்திக்க வேண்டும். நுண்கோல் கொண்டு வாழ்த்துவது என்பது பழமையின் எச்சத்தைக் கடைப்பிடிப்பதாகத்தான் கருத வேண்டும். ''தொடக்க காலத்தில் பயன்படுத்தியக் கருவி பாட்டு மரபுக்குள் ஒரு சாதாரணக் கோலாக மாற்றம் அடைந்து உள்ளமையையும் காணலாம். எந்நிலையில் பரிணமித்தாலும் தொடக்க கால பழக்கவழக்கம் ஏதேனும் ஒரு அடையாளமாகக் கடைப்பிடிக்கப்படும் என்பதற்கு இது சான்றாக அமைவதைக் காணலாம்.

**கொந்தளங்கண்ணிக் கொளைவில் வேட்டுவர்**

(பதி 30.9)

''வேட்டைத் தொழிலை மேற்கொள்வர்கள் வேட்டுவர் ஆகும் எனவே, ''காந்தன்அம் கண்ணி'' என்பது துன்பம் செய்ய கண்ணி என்பதாகும். கண்ணி'' என்பது பறவைகளைப் பிடிப்பதற்கும் பயன்படுத்தப்படும் கருவியாகும். இவனும் தமிழகத்தில் கண்ணி வைத்து பறவைகளைப் பிடிக்கும் முறை காணப்படுகிறது. கேரளத்தில் கண்ணூர் பகுதியில் வாழும் வேட்டுவர் இனமக்களிடம் இக்கண்ணி வைக்கும் முறை இன்றும் நடைமுறையில் இருப்பதை காணமுடிகிறது என்பர். எனவே, ''காந்தள்அம் என்பது கொடுமையான துன்பத்தைக் கொடுக்கும் என்ற பொருளிலே கண்ணிக்கு பெயரடையாக வந்துள்ளதை உணரலாம். ''கொலைவில்'' என்பது கொலை செய்யக்கூடிய வில் என்பதாகும். விலங்குகளைச் கொலை செய்து வேட்டையாட வில் கருவியைப் பயன்படுத்தியுள்ள பதிவினைக் காண முடிகிறது. வேட்டைத் தொழில் செய்ய கண்ணி, வில் என்ற இரண்டு. கருவிகள் தமிழ்ச் சமுகத்தால் உருவாக்கப்பட்டு தங்கள் உணவுத் தேவையினை நிறைவேற்றிக் கொண்ட நிகழ்வை இப்பதிவின் வழியாகக் காணமுடிகிறது.

வில் ஆயுதம் கூட்டுநிலை வாழ்வில் தமிழ்க் கூட்டத்தால் பயன்படுத்தப்பட்ட குழலைத்தான் இதுகாட்டுகிறது. வில் என்பது முதலில் வேட்டைநிலைக் கருவியாகத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இப்பழங்குடியின் எச்சத்திலிருந்து அறிய முடிகிறது. ஏனெனில் ''வில்வேடர் என வில்லினையுடைய வேடர் என்றே இப்பழங்குடி அழைக்கப்படுகிறது. இவ்வாயுதம் பழங்குடிகளுக்கு உளவுத் தேடலுக்குப் பயன்பட்டிருக்கிறது. மோதல்களுக்கும் பயன்படுத்தப்பட்டு இருந்துள்ளதைப் பதிற்றுப்பத்து எடுத்தியம்புகிறது சேர இனக்குழுவின் அடையாளமாகவும் இது இருப்பதை நோக்க வேண்டும். பழங்குடிகளாகத் தொடக்க வாழ்வில் இருந்த பொழுது அவர்களின் வாழ்வியல் பண்பாட்டோடு பின்னி பிணைந்திருந்த ஆயுதமாக இருந்திருக்க வேண்டும்.

பழங்கால மனிதன் பயன்படுத்திய தடி நிலையிலிருந்து அடுத்ததாக கண்ணி, வில் முதலிய கருவிகள் உருவாக்கப்பட்டுள்ள சூழலைக் காணவேண்டும். இவ்விரு கருவிகளையும் உருவாக்க மனித சமூகம் பல்வேறு வேட்டைக் காலகட்டங்களைக் கடத்து வந்துள்ளது என்ற கருத்தாக்கமும் உருவாகின்றது. கண்ணி என்ற கருவி சிறிய

*வேட்டை நிலையினையும், வில் என்னும் கருவி பெரிய வேட்டை நிலையினையும் உணர்த்துகின்றது.*

**உழவுத் தொழில் கருவிகள்**

*உழவுத் தொழில் மனித வாழ்வின் முக்கிய பரிணாமம் ஆகும். உழவுத் தொழிலைக் கண்டுப்பிடித்தவர்கள் பெண்களே என்ற கருத்தாக்கச் சிந்தனை காலங்காலமாக ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உழவுத் தொழிலே முக்கிய உணவுத் தேவையாக மாறியபின் தமிழ்ச்சமுகம் புதிய யுகத்திற்கு மாறியது. இத்தொழில் செய்ய பல்வேது கருவிகள் உருவாக்கப்பட்டன. இக்கருவிகள் அக்கால நவீனத்துவம் பெற்றதாக இருந்துள்ளதையும் நோக்க வேண்டும். நிலத்தை உழுவதற்குக் கலப்பை என்ற கருவி பயன் படுத்தப்பட்டுள்ள செய்தியைப் பதிற்றுப்பத்து பல இடங்களில் பதிவு செய்துள்ள நிலையினைக் காணலாம்.*

***"நிலக்கண் வாட நாஞ்சில் கடிந்து***

***(பதி . 19:17)***

*அதாவது கலப்பைகள் கொண்டு உழாமல் நிலம் வாடுவதாகக் கூறப்பட்டுள்ளது. இங்குக் கலப்பை என்பது முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். நிலத்தை கீறி விதைகள் விதைப்பது என்பத பக்குவப்பட்ட வேளாண்மை என்பதை உணரவேண்டும். இதற்குக் கலைப்பை என்ற கருவி பயன்படுத்தப்பட்டுள்ளமை அவர்களின் தொழில் நுட்பச் சிந்தனையைக் காட்டுகிறது மேலும்,*

***"மாவா டியயுல நாஞ்சில் லாடா***

***(பதி: 25: 1)***

***"களிறச டியபுல நாஞ்சி லாடா***

***(பதி: 26: 2)***

*எனச் சேரனின் யானைப் படைகள் சென்ற இடங்களில் கலப்பை கொண்டு உழ முடியாத படி ஆனதாக புலவர் கூறவதையும் காணவேண்டும். கலப்பை என்ற கருவி உழவில் முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காணமுடிகிறது. கலப்பை என்பது கடுமையாக இருக்கும் நிலத்தைக் கீறி அதனை முறைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு உள்ளதாகவே பதிவுகள் கூறுகின்றன. மேலும், கலப்பை கொண்டு உழுதபின் பலகை கொண்டு அந்நிலத்தை நிரவி உள்ளனர். இதன்மூலம் நீர் பாய்ச்சுவது எளிது என்பதையும் உணர வேண்டும் நிலத்தை நன்றாக உழும் பொழுது அதில் நீர் பல நாட்கள் பிடித்து நிற்கும் என்பதையும், சிந்திக்க வேண்டும். இதனை,*

***சீருடைப் பல்பக டொயிப்பப் பூட்டி***
***நாஞ்சி லாடிய கொழுவதி மருங்கின்***
***அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்"***

***(பதி) 38; 16-18)***

*என்ற அடிகள் கூறுகின்றன உழவு செய்ய கலப்பை, கொழு போன்றவை பயன்படுத்தியது போல் நெல்லை விளைய வைத்து அறுக்க அரிவாள் பயன்படுத்தப்பட்டு உள்ளது.*

***"நெல்லின் செறுவி னெய்தல் பூப்ப***
***அரிநர் கொய்லாண் மடங்க"***

***(பதி: 16:21-22)***

*இங்கு நெல் அறுக்கும் போது அதன் அடர்த்தியின் காரணமாக அறுக்கும் அரிவான் மடங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. நெல்லறுக்கும் கருவி' "கொய்வாள்" என்று கூறப்பட்டுள்ளதையும் காண வேண்டும். அதுபோலவே கலப்பைக்கு "நாஞ்சில்" என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது. "நாஞ்சில் நாடு" என்று கன்னியாக்குமரி வழங்கப்படுவதைக் நோக்க வேண்டும் இப்பகுதி உழவுத்தொழில் செய்யும் இடமாக இருந்துள்ளது எனலாம். ஆகவே, பதிற்றுப்பத்து கால சமுகத்தில் உழவுத் தொழில் சார்ந்து கலப்பை, கொழு, கொய்வாள் ஆகிய கருவிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. உழவுத் தொழில் மிக முக்கியமான வளர்ச்சி நிலை எனலாம். உழவுத்தொழில் உருவாக்கமே தமிழ்ச் சமுகத்தின் மேம்பாடான பரிணாமத்திற்குக் காரணமாகும். "கி.மு. 3000த்தின் தொடக்க கால விவசாயத்தில் தொன்மையான முறை மட்டுமே செய்யத்தக்க ஒரே முறையாக இருந்திருக்கும். தீர்மானகரமான கூடுதல்*

உயிர்ப்புக்கு இட்டுச் செல்லும் எந்த ஒரு மெய்யான புத்தாக்கமும், நகரங்களின் மக்கள் தொகையிலும் கட்டிடக் கலையிலும் அதற்கிணையான புரட்சிகளின் அறிகுறியாக இருந்திருக்கும். எப்பேர்ப்பட்ட மண்ணையும் உடைக்க முடியக்கூடிய செம்மையான கலைப்பையானது இரும்புக் காலத்தின் போதுதான் பயன்பாட்டுக்கு வந்தது"[15] என உழும் கலப்பை இரும்புக் காலத்தில் தோற்றம் பெற்ற முறையை டி.டி. கோசாம்பி கூறுவதைக் காணலாம்.

அடுத்ததாகக் கிணறு தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கோடாலி முக்கியத்துவம் பெற்றதாகக் கருதலாம். இக்கருவி பள்ளம் தோண்டி உழுதொழில் செய்வதற்கு வேண்டிய நீரினை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகிறது.

"**பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்**
**சிரறு சில சூறிய நீர்வாய்ப் பத்தற்**"

(பதி 22 12-13)

என இரும்பு கோடாலியால் பாறையினை உடைத்து குழி தோண்டுவதால் அதில் நீர் ஊறுவதாகக் கூறப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் இவ்வாறு செய்து பசுக்களுக்கு தண்ணீர் காட்டுகின்றனர். கொங்கர்கள் இதில் கிணறு தோண்டப்பட்ட செய்தியைக் காணமுடிகிறது. ஆகவே கோடாலியின் உதவியால் கிணறு தோண்டி அதன் மூலம் நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாறை போன்ற கடினத்தன்மை கொண்ட பொருள்களை உடைப்பதற்கு இக்கருவி அச்சமூகத்திற்குப் பயன்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்து கூறும் கோடாலி இரும்பால் செய்யப்பட்டதாகும். இரும்பு கண்டு பிடிக்கப்பட்ட பின் உருவாக்கப்பட்டதாகும். ஆயினும் இக்கோடலியின் தொடக்க வடிவம் கல்லில் செய்யப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். ஒரு ஆயுதம் திடீரெனத் தோன்றுவது கிடையாது. இதற்குமுன் பல்வேறு அடையாளமாகவும் தொழில் நுட்பத்தின் தொடக்கமாகவும் இருந்திருக்க வாய்ப்புண்டு. இதன் தொல் வடிவத்தை கற்கோடாலி என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். "ஏழரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் மனிதன் கல்லில் இருந்து கைக்கோடாரிப் பண்பாடு என்கிற முதற் கற்காலம் தமிழகத்தில் சுமார் இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்துள்ளது"[16] எனத் தமிழ்நாட்டு வரலாறு தொல் பழங்காலம் என்னும் நூலில் கணியன்பாலன் கூறுகிறார்.

ஆகவே, காட்டுமிராண்டி வாழ்வில் கற்கோடாரிகள் பயன்பட்டில் இருந்துள்ளன. இக்கோடாரியின் பண்பாட்டுப் பரிணாமத்தில் இரும்பு பயன்பாடு தோன்றிய பின்பு கற்கோடாரி, இரும்புக் கோடாரியாக உருமாற்றம் செய்யப்பட்டது. தமிழ்ச் சமூகம் கனிமப் பயன்பாட்டைப் பெருக்கியது என்பது ஒரு வளர்ச்சி நிலையாகும். கற்கோடாரி வெகுவிரைவில் சிதைந்து போகவும் பயன்படுத்துவதற்கு கடினமாகவும் இருந்திருக்கிறது. இரும்புக் கோடாலி நீண்ட நாள் பயன்பாடும் எளிமையான புழக்கநிலையும் கொண்டதாகும்,

இக்கோடாலி வேட்டைநிலை வாழ்வினில் விலங்குகளைத் தாக்கி வேட்டையாட பயன்படுத்தப்பட்ட நிலையில் இரும்புக் கோடாலியாக உருமாறிய பொழுது உழவுத் தொழில் சார் தேவைக்கு புழங்கப்பட்டது. காலகட்டத்தின் தேவைக்கும். சூழலுக்கும் ஏற்ப பயன்படுத்தப்பட்ட முறையை உணரலாம். நாகரிகத்தின் படிநிலைவில் ஒரு கருவி தன்னை மனித சமூகத்துடன் நிலைநிறுத்திக்கொள்ள மற்றொரு பயன்பாட்டுத் தேவைக்கு துணை புரிவதை ஆராய்ந்து காணலாம். வேட்டை நிலைப் பண்பாட்டு வாழ்விலிருந்து வேளாண் நிலைப் பண்பாட்டு வாழ்வாக தரம் உயர்த்திக் கொண்டபொழுது கருவிகளை அதற்கு தகுந்த நிலையில் தமிழ்ச் சமூகம் வடிவமைப்பு செய்துள்ளதை இத்தரவுகள் இயம்புகின்றன. மேலும், புதிய கற்காலத்திலேயே உழுதொழில் தமிழ்ச்சமூகத்தில் தோற்றம் பெற்று

வளர்ச்சியடைந்து இருந்துள்ளதை கற்காலத்திய மக்கள் உழுதொழில் செய்து பயிர் விளைவித்தல், ஆடு, மாடு வளர்த்தல் மட்பாண்டம் வளைதல் போன்ற தொழில்களை செய்துள்ளனர் எனப் புலப்படுகிறது. தமிழ்நாட்டில் சேலம், தருமபுரி, வேலூர் மாவட்டங்களில் அவர்கள் வாழ்ந்த தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கேழ்வரகு. கொள், பச்சைப் பயறு போன்ற தானியங்களைப் பயிரிட்டனர்[7] என நடன. காசிநாதன் தன் தொல்லியல் ஆய்வில் கூறுவதைக் காணலாம்.

ஆகவே, உழவுத் தொழில் என்பது புதிய கற்காலத்தின் இறுதியில் தோற்றம் பெற்று ஊடாட்டம் நிகழ்த்தியிருக்க வேண்டும். தொல்லியல் ஆய்வாளர்கள் கூறும் அதே உணவு தானியங்களையே சேர மக்கள் இனமும் பயிர்செய்து வாழ்ந்துள்ளனர். மேற்கண்ட தரவுகள் அடிப்படையில் உழவுத் தொழில் புதிய கற்காலத்திலேயே உருவானதாகும்.

## முடிவுரை

பதிற்றுப்பத்து முன் வைக்கும் தடி, கல்லாயுத பயன்பாட்டுக்குப்பின் நவீன ஆயுதமாக வில் கருதப்பட்டுள்ளது. வில் தூரத்தில் இருக்கும் விலங்குகளை எளிதாகத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை உணரலாம். இந்த வில் பயன்பாடு பிற்காலத்தில் சேர வேந்தர் உருவாக்கத்தில் தனிஅடையாளமாகக்கருதப்பட்டுள்ளமையும் நோக்க வேண்டும். சேர இனக் குடியினர் வேட்டைச் சமூக நிலையில் முக்கிய குடியாக விளங்கியுள்ளனர், வேட்டை நிலையில் அதிகார மையம் இக்குடியினரால் உருவாக்கப்பட்ட பண்பாட்டு நிலையையே வில் அடையாளச் சின்னம் காட்டுகிறது. இனக்குழு, வேட்டைத் தொழில் கருவிகள், உழவுத்தொழிலும், உழவு முறைகளும் நவீனத்துவம் சார்ந்ததாகத் தென்படவில்லை. அவை பழங்கால முறையாகவே இருப்பதனைக் காண முடிகிறது. கடினமாக நிலத்தை உழவு செய்ய தொடக்க காலத்தில் உருவாக்கப்பட்ட கலப்பை முறையையே கையாண்டுள்ளனர் என்ற பதிவுகளே பதிற்றுப்பத்தின் மூலமாகக் கிடைக்கின்றன. மக்களின் வாழ்வியலும் உழவுத்தொழில் சார்ந்தே இருப்பதினையும் புதிய கற்கால மக்களின் வாழ்வியலும் உழவுத்தொழிலையே மையமிட்ட நிலையாக மாற்றம் அடைத்து இருந்ததாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுவதையும் ஒப்பு நோக்க வேண்டும். ஆகவே, பதிற்றுப்பத்து உரைக்கும் உழவு முறைகள், பயிர் வகைகள் புதிய கற்காலத்தின் இறுதியில் தோற்றம் பெற்றதாகவே முடிவுக்கு வரலாம்.

## சான்றெண் விளக்கம்


1. தமிழ்மேல் நிகழ்ந்த பண்பாட்டு படையெடுப்புகள், க.ப.அறவாணன், பக்.61.
2. மேலது, பக்.62.
3. காக்கைச் சிறகினிலே (இலக்கிய மாத இதழ்) க.பஞ்சாகங்கம், பக்.94.
4. இந்திய பண்பாட்டு வரலாறு, ந.சுப்பரமண்யன், பக்.16.
5. தமிழும் பண்பாடும், தெ.பெ.மீனாட்சி சுந்தரனார், பக்.10.
6. தமிழின் பண்பாட்டு வெளிகள், தி,சு. நடராசன், பக்.1.
7. பண்பாட்டு மானிடவியல், பக்தவச்சல பாரதி, பக்.110.
8. கலைக்களஞ்சியம், தமிழ் இணையக் கல்விக்கழகம்
9. தமிழகப் பழங்குடிகள், பக்தவச்சல பாரதி, பக்.38.
10. கலைச்சொல் பேரகராதி
11. தமிழ் மக்கள் வரலாறு, க.ப. அறவாணன், பக்.44.
12. செந்ததமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி

13. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 6, பக்.569.
14. இலக்கிய மானிடவியல், பக்தவச்சல பாரதி, பக். 130.
15. இந்திய வரலாறு ஓர் அறிமுகம், டி.டி. கோசாம்பி, பக். 16-17.
16. பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், கணியன்பாலன், பக்.220.
17. தமிழக வரலாற்றுத் தடயங்கள், நடன. காசிநாதன்,பக். 8-9.